<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 9/2019

இன்று 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பத்மநாபன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 17.12.2024 | மாவட்டம் | : திருப்பூர் |

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

நான் இவ்வழக்கில் 3ம் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 08.06.1958ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் பதிவு சான்று நகல் **வா.சா.ஆ.1** ஆகும். நில உடமை பதிவேட்டின் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். கடந்த 15.10.2016ம் தேதியிட்ட பட்டா எண் 6456ன் கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும். தாவா சொத்துக்கான மாதிரி வரைபடம் **வா.சா.ஆ.4** ஆகும். கடந்த 02.12.1922ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு சான்று நகல் **வா.சா.ஆ.5** ஆகும். கடந்த 25.06.1927ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் கணினி சான்று நகல் **வா.சா.ஆ.6** ஆகும். கடந்த 08.05.1929ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் கணினி சான்று நகல் **வா.சா.ஆ.7** ஆகும். கடந்த 05.12.2003ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் கணினி சான்று நகல் **வா.சா.ஆ.8**. கடந்த 05.12.2003ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண 5090/2003ன் கணினி

சான்று நகல் **வா.சா.ஆ.9** ஆகும். கடந்த 05.12.2003ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண் 5091/2003ன் கணினி சான்று நகல் **வா.சா.ஆ.10** ஆகும். ரீ சர்வே ரெஜிண்டரின் உண்மை நகல் **வா.சா.ஆ.11** ஆகும். கடந்த 14.12.2024ம் தேதியிட்ட பட்டா எண் 1940ன் கணினி நகல் **வா.சா.ஆ.12** ஆகும். கடந்த 21.10.2002ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண் 3376/2002 ன் கணினி நகல் **வா.சா.ஆ.13** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2024.12.17 17:11:33 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.